# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

# வத்திராயிருப்பு

DVC. எண். 4/2025

RW1 – மாரிமுத்து, S/o மாரியப்பன்

தேதி – 06.03.2026

**<u>சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை : –</u>**

நிரூபண வாக்குமூலம் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் நான் நீதிமன்றத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரிதான். நான் காவல்துறையில் பணிபுரிந்ததாக சொல்லி உள்ள நிலையில் எந்த வருடத்தில் காவல்துறையின் நான் பணிக்கு சேர்ந்தேன் என்றால் 2011 வது வருடத்தில் பணிக்கு சேர்ந்தேன். நான் வேலைக்கு சேர்வதற்கு முன்பே எனக்கும், மனுதாரருக்கும் காதல் உறவு இருந்தது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் மனுதாரர் நான் காவல்துறையில் வேலை பார்ப்பதால் பணத்துக்கு ஆசைப்பட்டு என்னை கட்டாயத்தின் பேரில் திருமணம் செய்து கொண்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

கட்டாய திருமணம் செய்ததாக சொல்லியுள்ள நிலையில் அதை எதிர்த்து புகார் மனு எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய துறையில் கொடுத்துள்ளேன். எந்த தேதியில் நான் புகார் கொடுத்தேன் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கும், மனுதாரருக்கும் கடந்த 12.06.2014 அன்று மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் வைத்து பெரியவர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரின் வீட்டுக்காரர்கள் மட்டும் தான் வந்திருந்தார்கள். எனது தரப்பிலிருந்து யாரும் அழைக்கப்படவில்லை. திருமணம் விருப்பப்பட்டு தான் நடைபெற்றது என்று சொன்னால் இல்லை. திருமணத்தின் பொழுது நான் சந்தோசமாக தான் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. ஊர்

பெரியோர்கள் முன்னிலையில் தான் திருமணம் நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல.

திருமணத்தின் பலனாக திஷா என்ற பெண் குழந்தை பிறந்தது என்று சொன்னால் சரிதான். திருமணத்துக்கு பின்னிட்டு எத்தனை நாட்கள் நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் 10 நாட்கள் மட்டும் தான். மனுதாரருடைய சித்தப்பா பாக்கியம் என்பவரின் வீட்டில் வசித்தேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 10 மாதங்களாக மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்ததாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது தட்டச்சுப் பிழை. மனுதாரர் என் மீது திருவல்லிபுத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கடந்த 30.08.2015 அன்று ஒரு புகார் மனு கொடுத்தார் என்று சொன்னால் பொய் புகார் கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் மீது கடந்த 02.09.2015 அன்று விசாரணைக்கு ஆஜராகி ஒரு வாக்குமூலம் எழுதிக் கொடுத்தேன் என்று சொன்னால் நான் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை.

19.10.2015 அன்று நான் காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்த வாக்குமூலத்தில் திருமணத்திற்கு முன்பு நானும் மனுதாரரும் நான்கு வருடங்களாக காதலித்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேலும் அதே வாக்குமூலத்தில் திருமணத்துக்கு பின்னிட்டு 5 மாதங்களாக மனுதாரர்களுடன் சேர்ந்து வாழ்ந்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதே வாக்குமூலத்தில் மனுதாரரை அழைத்துக் கொண்டு பதிவு துறை அலுவலகத்தில் திருமணத்தை பதிவு செய்வதாக ஒப்புக்கொண்டு எழுதிக் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விசாரணையில் என்னுடைய அக்காவும் ஒரு வாக்குமூலம் எழுதிக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி புகார் மனுவிற்கு, மனுதாரரும் நான் அவரை 20 நாட்களில் அழைத்துச் சென்று சேர்ந்து வாழ்வதாக சொல்லியதை ஏற்றுக்கொண்டு அவர் கொடுத்த புகார் மனுவை முடித்துக் கொள்வதற்காக வாக்குமூலம் எழுதிக் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல.

கூடுதல் வரதட்சணை கேட்டு மனுதாரரிடம் பிரச்சனை செய்ததாக என் மீதும், என் குடும்பத்தார்கள் மீதும் 18/2018 என்ற குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று

சொன்னால் சரிதான். மேற்படி வழக்கில் தீர்ப்பு பகிரப்பட்டு விடுதலை ஆகிவிட்டது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் எதற்காக நான் பணியிடை நீக்கம் செய்யப்பட்டேன் என்றால் என் மீது கொடுக்கப்பட்ட பொய் புகாரின் காரணமாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டேன். பணி இடை நீக்க உத்தரவை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

01.02.2021 முதல் 03.02.2021 வரை தூத்துக்குடியில் சட்ட ஒழுங்கு பணியில் ஈடுபட்டதாக சொல்லியுள்ள நிலையில், அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்து உள்ளேன். மேற்படி மூன்று நாட்களிலும் எனக்கு ஒதுக்கப்பட்ட பணி நேரம் என்ன என்றால் 24/7 ஆகும். மேற்படி தூத்துக்குடியில் நான் பணியில் ஈடுபட்டதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேனா என்றால் சமர்ப்பித்து உள்ளேன். திருவல்லிபுத்தூர் மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தில் கடந்த 27.06.2019 அன்று HMOP No. 49/2016 என்ற வழக்கில் மனுதாரருக்கு ஆதரவாக வாழ்வுரிமை மீட்பளிப்பு பரிகாரம் வழங்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி உத்தரவுக்கு பின்னர் மனுதாரர் என்னுடன் ஒரு வருடம் வசித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. ஒரு வருடங்களாக மனுதாரர் என்னுடன் ஒரே வீட்டில் தான் வசித்து வந்தார் என்றும், அவ்வாறு வசித்து வந்த சமயத்தில் மின் இணைப்பை துண்டித்து, வீட்டின் சாவியை அபகரித்து வைத்ததாக என் மீது நில அபகரிப்பு பிரிவில் புகார் மனு கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

மேற்படி புகாரியின் மீது விசாரணைக்கு ஆஜராகி, கடந்த 22.07.2020 அன்று எனது அக்காவிடம் இருக்கும் வீட்டின் சாவியை வாங்கி மனுதாரரிடம் ஒப்படைப்பதாக வாக்குமூலம் எழுதிக் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. 11.08.2020 அன்று என்னுடைய மனைவி என்னுடைய வீட்டுக்கு வந்ததை நானும் எனது குடும்பத்தாரும் சட்ட விரோதமாக தடுத்ததாக நத்தம்பட்டி காவல் நிலையத்தில் மனுதாரர் ஒரு புகார் மனு கொடுத்தார் என்றால் பொய் புகார் மனு. அதற்கு பின்னிட்டும் நான் மனுதாரரை

கொடுமை செய்து வந்ததால் அவர் விஷம் அருந்தி தற்கொலை செய்வதற்காக முயற்சி செய்தார் என்று சொன்னால் அந்த காலகட்டத்தில் நான் வேலையில் இருந்ததால் எனக்கு எதுவும் தெரியாது. மேற்படி சம்பவத்தால் என்மீது நத்தம்பட்டி காவல் நிலையத்தில் குற்ற எண் 12/21 என்ற வழக்கு பதியப்பட்டது என்று சொன்னால் பொய் வழக்கு.

எனது தாயாருக்கு மாதம் ரூ.15,000/- கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் அதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாயருக்கு கொடுத்த தொகைக்கு எவ்வாறு ஆவணங்கள் சமர்ப்பிக்க முடியும். 2 முதல் 8 வரையிலான எதிர்மனுதாரர்கள் வெவ்வேறு முகவரியில் வசித்து வருவதாக சொல்லியுள்ள நிலையில் அதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1, 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் அரசுத்துறை அலுவலகங்களில் வேலை பார்த்து வருவதாக சொல்லியுள்ளதை காண்பிக்க ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கூடுதல் மகளிர் நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்தேன். இந்த வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நிரூபண வாக்குமூலத்தில் மனுதாரருக்கு தனியாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் குறித்த விபரங்கள் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் ஆனால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

திருவில்லிபுத்தூர் மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நான் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவின் நகலை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் போலியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மனைவி மீது விவாகரத்து வேண்டும் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கு மனுவில் கூறியுள்ள பரிகாரங்கள் அனைத்தும் கிடைக்கக் கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை .**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு